# QB365 Question Bank Software Study Material

## வரலாறு - தேசியம் காந்திய காலகட்டம் முக்கியமான 2 & 5 மதிப்பெண் வினாக்கள் விடைகளுடன்(புத்தக & ஆக்கபூர்வமான வினாக்கள்)

## 10ம் வகுப்பு

## சமூக அறிவியல்

மொத்த மதிப்பெண் : 50

**2 மதிப்பெண் வினாக்கள்**

15 x 2 = 30

1) ஜாலியன்வாலா பாக் படுகொலை பற்றி விவரிக்கவும்.

**பதில் :** 1. அமிர்தசரஸில் உள்ள ஜாலியன்வாலாபாக்கில் 1919 ஏப்ரல் 13ஆம் நாள் ரௌலட் சட்டத்திற்கு எதிரான ஒரு பொதுக்கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திருந்தது.
2. ஆயிரக்கணக்கான கிராம மக்கள் அங்கு கூடியிருந்தனர்.
3. இக்கூட்டம் பற்றி அறிந்தவுடன் அந்த இடத்தை பீரங்கி வண்டி மற்றும் ஆயுதமேந்திய வீரர்களுடன் ஜெனரல் ரெஜினால்டு டயர் சுற்றி வளைத்தார்.
4. உயர்ந்த மதில்களுடன் அமைந்த அந்த மைதானத்துக்கு இருந்த ஒரே வாயில் பகுதியை ஆக்கிரமித்த ஆயுதமேந்திய வீரர்கள் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி கண்மூடித்தனமாக சுடத்தொடங்கினர்.
5. துப்பாக்கிக் குண்டுகள் தீரும் வரை தொடர்ந்து 10 மணித்துளிகளுக்கு இந்தத் துப்பாக்கிச் சூடு நிகழ்ந்தது. 379 பேர் இந்த துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டனர். ஓராயிரத்திற்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர்.
6. இது ஜாலியன் வாலாபாக் படுகொலை என்று அழைக்கப்படுகிறது. இது இந்தியர்களைக் கொதித்தெழச் செய்தது.

2) கிலாபத் இயக்கம் பற்றி குறிப்பு வரைக.

**பதில் :** 1. இசுலாமிய மதத்தலைவர் என உலகம் முழுவதும் போற்றப்பட்ட துருக்கியின் கலிபா கடுமையாக நடத்தப்பட்டார்.
2. அவருக்கு ஆதரவாக தோற்றுவிக்கப்பட்ட இயக்கமே கிலாபத் இயக்கம் என்று அழைக்கப்பட்டது.
3. மௌலானா முகமது அலி மற்றும் மௌலானா சௌகத் அலி எனும் அலி சகோதரர்கள் தலைமையில் இவ்வியக்கம் நடந்தது.
4. இந்த இயக்கத்துக்கு ஆதரவளித்த காந்தியடிகள், இந்த இயக்கத்தை இந்து முஸ்லிம்களை இணைக்க ஒரு வாய்ப்பாகக் கருதினார்.

3) ஒத்துழையாமை இயக்கத்தை ஏன் காந்தியடிகள் திரும்பப்பெற்றார் ?

**பதில் :** 1. ஒத்துழையாமை இயக்கம், ரௌலட் சட்டம் மற்றும் ஜாலியன் வாலாபாக் படுகொலைக்கு எதிராகக் குரல் கொடுக்க 1920 ஆகஸ்ட் முதல் நாளில் காந்தியடிகளால் தொடங்கப்பட்டது.
2. ஒத்துழையாமை இயக்கம் உச்சத்தில் இருந்தபோது உத்திரப்பிரதேசத்தில் சௌரி சௌரா என்ற இடத்தில் 1922இல் நடைபெற்ற வன்முறை நிகழ்வால் காந்தியடிகள் மனம் வருந்தினார்.
3. ஒத்துழையாமை இயக்கம் வன்முறை இயக்கமாக மாறுவதைத் தடுக்க. அதனை 1922ஆம் ஆண்டு திரும்பப் பெற்றார்.

4) சைமன் குழு புறக்கணிக்கப்பட்டது ஏன்?

**பதில் :** 1. சர் ஜான் சைமன் தலைமையிலான இந்தக் குழுவில் ஏழு உறுப்பினர்கள் இடம் பெற்றனர். இக்குழுவில் இந்தியர்கள் எவரும் இடம்பெறாமல் அனைவரும் வெள்ளையர்களாகவே இடம் பெற்றனர்.
2. இந்தியர் ஒருவர் கூட உறுப்பினராக இல்லாத காரணத்தால் இந்தியர்கள் ஆத்திரமும் அவமானமும் அடைந்தனர். தங்கள் அரசியல் சாசனத்தை நிர்ணமிக்க தங்களுக்கு உரிமை இல்லாத நிலை கண்டு கொதித்தனர்.
3. காங்கிரஸ் மற்றும் முஸ்லீம்லீக் உள்ளிட்ட அனைத்து இந்தியப் பிரிவுகளும் சைமன் குழுவினை புறக்கணிப்பது என முடிவு செய்தது.

5) முழுமையான சுயராஜ்ஜியம் என்றால் என்ன?

**பதில் :** 1. டொமினியன் எனப்படும் தன்னாட்சிப் பகுதியின் தகுதி குறித்து திருப்தி அடையாத காங்கிரஸினர் சிலர், முழுமையான சுதந்திரம் வேண்டி கோரிக்கை வைத்தனர்.
2. 1929 டிசம்பர் மாதம் லாகூரில் ஜவகர்லால் நேரு தலைமையில் நடந்த காங்கிரஸ் அமர்வில் முழுமையான சுதந்திரம் என்பது இலக்காக அறிவிக்கப்பட்டது.
3. முழுமையான சுயராஜ்ஜியம் என்பது முழுமையான சுதந்திரம் பெறுவது ஆகும்.

6) பகத் சிங் பற்றி குறிப்பு வரைக.

**பதில் :** 1. பஞ்சாபில் பகத்சிங், சுக்தேவ் மற்றும் அவரது தோழர்கள் இந்துஸ்தான் குடியரசு ராணுவத்தை மீண்டும் அமைத்தனர்.

2. பொதுவுடைமை கருத்துக்களால் ஈர்க்கப்பட்டு அந்த அமைப்புக்கு இந்துஸ்தான் சமதர்மவாத குடியரசு அமைப்பு என்று பெயர் மாற்றம் செய்தனர்.

3. லாலா லஜ்பதிராயின் உயிரிழப்புக்குக் காரணமான தடியடியை நடத்திய ஆங்கிலேய காவல்துறை அதிகாரி சாண்டர்ஸ் படுகொலை செய்யப்பட்டார்.

4. 1929இல் மத்திய சட்டப் பேரவையில் புகைக்குண்டு ஒன்றை பகத்சிங்கும் B.K.தத்தும் வீசினார்கள்.

5. எவரையும் காயப்படுத்தும் நோக்கில் அந்தக் குண்டு எறியப்படவில்லை.

6. ராஜகுருவும், பகத்சிங்கும் கைதுசெய்யப்பட்டு மரணதண்டனை விதிக்கப்பட்டது. பகத்சிங்கின் அசாத்தியமான துணிச்சல் இந்தியா முழுவதும் வாழ்ந்த இளைஞர்களை ஈர்த்ததால் அவர் பிரபலமடைந்தார்.

7) பூனா ஒப்பந்தத்தின் கூறுகள் யாவை?

**பதில் :** 1932 ஆம் ஆண்டு காந்தியடிகள் மற்றும் அம்பேத்கர் இடையே ஒப்பந்தம் ஒன்று எட்டப்பட்டது. இது பூனா ஒப்பந்தம் என்று அழைக்கப்பட்டது.

**முக்கிய விதிமுறைகள்:**

1. தனித் தொகுதிகள் பற்றிய கொள்கைகள் கைவிடப்பட்டன மாறாக ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களுக்கு இட ஒதுக்கீடு வழங்கும் கூட்டுத்தொகுதிகள் பற்றிய யோசனை ஏற்கப்பட்டது.

2. ஒடுக்கப்பட்ட வகுப்பினருக்கான இடங்கள் 71லிருந்து 148ஆக அதிகரிக்கப்பட்டது. மத்திய சட்டப்பேரவையில் 18 சதவீத இடங்கள் ஒதுக்கப்பட்டன.

8) சுயராஜ்ஜியம் வேண்டியயோர் மற்றும் மாற்றத்தை விரும்பாதவர்கள் இடையே மோதல் ஏன் இருந்தது?

**பதில் :** (i) காங்கிரஸ் கட்சி இரண்டாகப் பிளவுபட்டது. அவை மாற்றத்தை விரும்புவோர்கள் மற்றும் மாற்றத்தை விரும்பாதவர்கள் என இரண்டு பிரிவுகள் ஆகும்.

(ii) மோதிலால் நேரு. சி.ஆர்.தாஸ் ஆகியோர் தலைமையிலான காங்கிரசார் தேர்தலில் போட்டியிட்டு சட்ட பேரவைக்குள் நுழைய வேண்டும் என்று விரும்பினார்கள்.

(iii) சட்டப் பேரவைகளில் பங்கேற்று பணியாற்றுவதன் மூலம் மட்டுமே தேசநலன்கள் மேம்படும் என்றும், இரட்டை ஆட்சியில் பங்கேற்பதன் மூலம் தான் காலனி ஆதிக்க அரசை பாதிப்படைய வைக்க முடியும் என்றும் அவர்கள் வாதிட்டனர்.

(iv) அவர்களே மாற்றத்தை விரும்புவோர் என்று அழைக்கப்பட்டனர். வல்லபாய் பட்டேல், சி.ராஜகோபாலாச்சாரி உள்ளிட்ட காந்தியடிகளைத் தீவிரமாகப் பின்பற்றிய பலர் மாற்றத்தை விரும்பாதவர்களாக அரசுடன் ஒத்துழையாமை இயக்கத்தை தொடர விரும்பினார்கள்.

9) பஞ்சாபில் ரௌலட் சட்டத்திற்கு எதிரான போராட்டம் குறித்து நீ அறிந்தவற்றை எழுதுக.

**பதில் :** (i) ரௌலட் சட்டத்துக்கு எதிரானப் போராட்டம் பஞ்சாபில் குறிப்பாக அமிர்தசரஸ் மற்றும் லாகூரில் தீவிரமடைந்தது.

(ii) காந்தியடிகள் கைது செய்யப்பட்டதுடன் பஞ்சாபிற்குள் நுழையவிடாமலும் தடுக்கப்பட்டார். ஏப்ரல் 9 ஆம் நாள் டாக்டர் சைஃபுதீன் சிட்ச்லு டாக்டர்.சத்யபால் என்ற இரண்டு முக்கிய உள்ளூர் தலைவர்கள் போராட்டத்திற்கு தலைமையேற்றதால்அமிர்தசரஸில் கைது செய்யப்பட்டனர்.

10) 1919 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட இந்திய அரசுச் சட்டம் பற்றி எழுதுக.

**பதில் :** (i) 1919 ஆம் ஆண்டின் இந்திய அரசுச் சட்டம் மூலமாக இரட்டை ஆட்சி என்பது அறிமுகம் செய்யப்பட்டது. இதன் மூலம் மாகாண அரசின் அதிகாரங்கள் ஒதுக்கப்பட்ட மற்றும் மாற்றப்பட்ட துறைகள் என இரண்டு வகைகளாகப் பிரிக்கப்பட்டது.

(ii) நிதி, பாதுகாப்பு, காவல்துறை, நீதித்துறை, நிலவருவாய் மற்றும் நீர்ப்பாசனம் ஆகியவை ஆங்கிலேயர்கள் வசம் ஒப்படைக்கப்பட்டன. மாற்றப்பட்டத் துறைகளில் உள்ளாட்சி, கல்வி, பொது சுகாதாரம், பொதுப்பணி, வேளாண்மை, வனங்கள் மற்றும் மீன்வளத் துறை ஆகியன இந்திய அமைச்சர்களின் கட்டுப்பாட்டின் கீழ்விடப்பட்டன.

11) நேரு அறிக்கை என்றால் என்ன?

**பதில் :** (i) சைமன் குழு முன்மொழிவுகளுக்கு மாற்றாக இந்தியாவுக்கு அரசியல் சாசனம் உருவாக்குவதை குறிக்கோளாகக் கொண்டு 1928இல் அனைத்துக் கட்சி மாநாடு நடைபெற்றது.

(ii) இந்தக் கொள்கையின் அடிப்படையில் அரசியல் சாசன வரைவுக்காக திட்டம் வகுக்க மோதிலால் நேரு தலைமையிலான கமிட்டி அமைக்கப்பட்டது. அந்த கமிட்டியின் அறிக்கை "நேரு அறிக்கை" என்று அழைக்கப்பட்டது.

12) 1815 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட இந்திய அரசுச் சட்டம் பற்றி எழுதுக.

**பதில் :** (i) ஆங்கிலேயர்கள் 1865 ஆம் ஆண்டு முதலாவது வனச்சட்டத்தை நிறைவேற்றினார்கள்.
(ii) கள்ளி எடுப்பது, கால்நடைத் தீவனம் மற்றும் தேன், விதைகள், மருத்துவ மூலிகைகள், கொட்டைகள் ஆகிய சிறிய அளவிலான வன உற்பத்திப் பொருட்களையும் வனப்பகுதிகளில் இருந்து சேகரிக்க இந்தச் சட்டம் வனத்தில் வாழ்வோருக்கு தடைவிதித்தது.

13) முதல் வட்டமேசை மாநாடு பற்றி விவரிக்கவும்.

**பதில் :** (i) முதல் வட்டமேசை மாநாடு லண்டனில் 1930 ஆம் ஆண்டு நடைபெற்றது. காங்கிரசின் தலைவர்கள் சிறைகளில் அடைக்கப்பட்டிருந்தால் இந்த வட்ட மேசை மாநாட்டில் காங்கிரஸ் கட்சி கலந்து கொள்ளவில்லை.
(ii) இந்தப் பிரச்சனை குறித்து எந்தவித முடிவும் இன்றி மாநாடு நிறைவடைந்தது. காங்கிரஸ் பங்கேற்பின்றி விவாதங்கள் நடத்துவதால் எந்தவொரு பயனும் இல்லை என்பது தெளிவானது. நிபந்தனையின்றி காந்தியடிகள் விடுதலை செய்யப்பட்டார்.

14) 1919ஆம் ஆண்டின் இந்திய அரசுச் சட்டம் அறிமுகம் செய்தவை யாவை?

**பதில் :** 1. 1919ஆம் ஆண்டின் இந்திய அரசுச் சட்டம் மூலமாக இரட்டை ஆட்சி என்பது அறிமுகம் செய்யப்பட்டது.
2. இதன் மூலம் மாகாண அரசின் அதிகாரங்கள் ஒதுக்கப்பட்ட மற்றும் மாற்றப்பட்ட துறைகள் என இரண்டு வகைகளாகப் பிரிக்கப்பட்டது.
3. நிதி, பாதுகாப்பு, காவல்துறை, நீதித்துறை, நிலவருவாய் மற்றும் நீர்ப்பாசனம் ஆகிய துறைகள் ஆங்கிலேயர்கள் வசம் ஒப்படைக்கப்பட்டன.
4. மாற்றப்பட்ட துறைகளில் உள்ளாட்சி, கல்வி, பொது சுகாதாரம், பொதுப்பணி, வேளாண்மை, வனங்கள் மற்றும் மீன்வளத் துறை ஆகியன இந்திய அமைச்சர்களின் கட்டுப்பாட்டின் கீழ் விடப்பட்டன.

15) 1930ஆம் ஆண்டு அரசுப் பிரதிநிதி இர்வின் பிரபுவிடம் கொடுக்கப்பட்ட மனுவில் அடங்கிய கோரிக்கைகள் யாவை?

**பதில் :** 1. ராணுவம் மற்றும் ஆட்சிப்பணி சேவைகளுக்கான செலவுகளை 50 சதவிகிதம் வரை குறைப்பது.
2. முழுமையான புறக்கணிப்பை அறிமுகம் செய்வது.
3. அனைத்து அரசியல் கைதிகளையும் விடுதலை செய்வது.
4. நிலவருவாயை 50 சதவிகிதமாகக் குறைப்பது.
5. உப்பு வரியை ரத்து செய்வது.

## 5 மதிப்பெண் வினாக்கள் 4 x 5 = 20

16) காந்தியடிகளை ஒரு மக்கள் தலைவராக உருமாற்றம் செய்ய உதவிய காரணிகள் என்ன என்று ஆராயவும்.
(அல்லது) இந்தியாவின் காந்தியடிகள் நடத்திய தொடக்கக்கால சத்தியாகிரகங்களை விளக்குக அவற்றின் விளைவு யாது?

**பதில் : தென்னாப்பிரிக்காவில் சத்தியாகிரகம்:**

1. டிரான்ஸ்வாலில் வசித்த இந்தியர்கள் தலைவரியாக 3 பவுண்டுகளை செலுத்தவேண்டியிருந்தது.

2. அவர்களுக்கென குறிக்கப்பட்ட பகுதிகளை விடுத்து வேறு இடங்களில் அவர்கள் நிலத்தை சொந்தமாக வைத்துக்கொள்ள முடியாத நிலை இருந்தது. மேலும் இரவு 9 மணிக்குப் பிறகு அனுமதியின்றி வெளியிடங்களுக்கு செல்லமுடியாத நிலையும் இருந்தது. இத்தகைய நியாயமற்ற சட்டங்களை எதிர்த்து அவர் போராட்டத்தை தொடங்கினார்.

3. தென்னாப்பிரிக்காவில் குடியேற்றம் மற்றும் இனவேறுபாடு ஆகிய பிரச்சனைகளுக்காகப் போராட சத்தியாகிரக சோதனைகளை அவர் மேற்கொண்டார்.

4. குடிபெயர்ந்தோரை பதிவு செய்யும் அலுவலகங்கள் முன் கூட்டங்களும், ஆர்ப்பாட்டங்களும் நடத்தினார்.

5. காவல்துறையினர் வன்முறையை கட்டவிழ்த்துவிட்டபோதிலும் அவர் எவ்வித எதிர்ப்பையும் காட்டவில்லை.

6. காவல்துறையினரின் கடுமையான நடவடிக்கையையும் பொருட்படுத்தாமல் போராட்டத்தைத் தொடர்ந்தார்.

7. இறுதியாக ஒப்பந்தத் தொழிலாளர்கள் மீது விதிக்கப்பட்ட தலைவரி ஸ்மட்ஸ்-காந்தி ஒப்பந்தத்தின்படி ரத்து செய்யப்பட்டது.

**இந்தியாவில் காந்தியடிகளின் தொடக்ககால சத்தியாகிரகங்கள்:**

1. இந்திய வருகையின்போது காந்தியடிகள் தான் சந்தித்த கோபால கிருஷ்ண கோகலே மீது பெரும் மரியாதை கொண்டு அவரையே தமது அரசியல் குருவாக ஏற்றார்.

2. கோகலேயின் அறிவுரையின்படி, அரசியலில் ஈடுபடுவதற்குமுன் நாட்டின் அனைத்துப் பகுதிகளுக்கும் காந்தியடிகள் பயணம் மேற்கொண்டார். இதனால் மக்களின் நிலையை அவர் அறிந்துகொள்ள வழி பிறந்தது.

3. இதுபோன்ற ஒரு பயணத்தின்போதுதான் தமிழகத்தில் தமது வழக்கமான ஆடைகளை விடுத்து சாதாரண வேட்டிக்கு காந்தியடிகள் மாறினார்.

**சம்பரான் சத்தியாகிரகம்:**

1. பீகாரில் உள்ள சம்பரானில் "தீன் காதியா" முறை பின்பற்றப்பட்டது. இந்த கரண்டல் முறையில் இந்திய விவசாயிகள் தங்களின் நிலத்தில் இருபதில் மூன்று பங்கு பகுதியில் அவுரி (இண்டிகோ) பயிரிட ஐரோப்பிய பண்ணையாளர்களால் கட்டாயப்படுத்தப்பட்டனர். இந்த வகையில் விவசாயிகள் அதிக சிரமங்களைச் சந்தித்தனர். காந்தியடிகள் சம்பரானுக்குச் சென்றார்.

2. காவல்துறையினர் அவரை அங்கிருந்து வெளியேறுமாறு கேட்டுக் கொண்டனர். இச்செய்தி பரவியதையடுத்து ஆயிரக்கணக்கானோர் அவருக்கு ஆதரவாகக் கூடினர்.

3. ராஜேந்திர பிரசாத் மற்றும் பிரஜ்கிஷோர் பிரசாத் ஆகியோர் காந்தி டிகளுக்குத் துணையாக செயல்பட்டனர்.

4. அதன்பிறகு துணைநிலை ஆளுநர் ஒரு குழுவை உருவாக்கினார். காந்தியடிகள் அக்குழுவில் ஒரு உறுப்பினர் ஆனார்.

5. இண்டிகோ பண்ணையாளர்கள், விவசாயிகள் மீது நடத்திய அடக்குமுறையை முடிவுக்குக் கொண்டுவரும் வகையில் "தீன் காதியா" முறையை ரத்து செய்ய அந்தக் குழு பரிந்துரைத்தது.

6. சம்பரான் சத்தியாகிரகத்தின் வெற்றியை அடுத்து 1918இல் அகமதாபாத் மில் வேலைநிறுத்தம், 1918இல் கேதா சத்தியாகிரகம் ஆகியன காந்தியடிகளை ஒரு மக்கள் தலைவராக உருவாக்கின.

17) காந்திய இயக்கத்தின் ஒரு சிறந்த உதாரணமான சட்டமறுப்பு இயக்கம் குறித்து விரிவாக ஆராயவும்.(அல்லது ) காந்தியடிகளின் சட்டமறுப்பு இயக்கத்தை பற்றி விவரிக்கவும்.

**பதில் : லாகூர் காங்கிரஸ் அமர்வு:**

1. 1929இல் டிசம்பர் மாதம் லாகூரில் ஜவகர்வால் நேரு தலைமையில் காங்கிரஸ் அமர்வு நடந்தது.
2. அதில் முழுமையான சுதந்திரம் என்பது இலக்காக அறிவிக்கப்பட்டது.
3. வட்டமேசை மாநாட்டை புறக்கணிப்பது என்றும் சட்ட மறுப்பு இயக்கத்தைத் தொடங்கவும் முடிவு செய்யப்பட்டது.
4. இந்த இயக்கத்தை தொடங்க இந்திய தேசிய காங்கிரஸ் காந்தியடிகளுக்கு அங்கீகாரம் அளித்தது.

**சட்ட மறுப்பு இயக்கம்:**

1930 ஜனவரி 31ஆம் நாளுக்குள் நிறைவேற்ற வேண்டும் என்ற காலக்கெடுவுடன் அரசப் பிரதிநிதி இர்வின் பிரபுவிடம் கோரிக்கைகள் அடங்கிய மனு கொடுக்கப்பட்டது. கோரிக்கை மனுவிற்கு அரசப்பிரதிநிதி பதில் தெரிவிக்காத நிலையில் காந்தியடிகள் சட்டமறுப்பு இயக்கத்தைத் தொடங்கினார்.

**உப்பு சத்தியாகிரகம்:**

1. உப்பு மீதான வரியை ரத்து செய்ய வேண்டும் என்ற கோரிக்கை ஒரு அறிவுபூர்வமான முடிவாகும்.
2. காந்தியடிகள் 1930 மார்ச் 12ஆம் நாள் 78 பேர்களுடன் சபர்மதி ஆசிரமத்திலிருந்து தனது புகழ் பெற்ற தண்டி யாத்திரையைத் தொடங்கினார். இந்த யாத்திரையில் நூற்றுக்கணக்கானோர் சேரச்சேர அது நீண்டு கொண்டே போனது.
3. காந்தியடிகள் தனது 61ஆவது வயதில் 24 நாட்களில் 241மைல் தொலைவு யாத்திரையாக நடந்து சென்று 1930 ஏப்ரல் 5ஆம் நாள் மாலை தண்டி கடற்கரையை அடைந்தார். அடுத்தநாள் காலை ஒரு கைப்பிடி உப்பை கையில் எடுத்து உப்புச் சட்டத்தை மீறினார்.
4. தமிழ் நாட்டில் திருச்சிராப்பள்ளியிலிருந்து வேதாரண்யம் வரை இது போன்ற ஒரு யாத்திரையை C.ராஜாஜி மேற்கொண்டார். கேரளா. ஆந்திரா மற்றும் வங்காளத்திலும் உப்பு சத்தியாகிரக யாத்திரைகள் நடந்தன.
5. வடமேற்கு எல்லை மாகாணத்தில் கான் அப்துல் கஃபார்கான் இந்த இயக்கத்திற்குத் தலைமை ஏற்றார்.
6. காந்தியடிகள் நள்ளிரவில் கைது செய்யப்பட்டு ஈரவாடா சிறையில் அடைக்கப்பட்டார்.
7. ஜவகர்லால் நேரு, கான் அப்துல் கஃபார்காள் மற்றும் இதர தலைவர்களும் கைது செய்யப்பட்டனர்.
8. அந்நிய துணிகள் புறக்கணிப்பு, மதுக்கடைகள் முன் ஆர்ப்பாட்டங்கள், வரிகொடா இயக்கம், வளச்சட்டங்களை பின்பற்ற மறுப்பது ஆகியன உள்ளிட்ட பல சட்ட மறுப்பு இயக்கங்கள் நடைபெற்றன.
9. பெண்கள், விவசாமிகள், பழங்குடியினர். மாணவர்கள் மற்றும் குழந்தைகள் என சமூகத்தின் அனைத்து பிரிவு மக்களும் நாடு தழுவிய போராட்டத்தில் பங்கேற்றனர்.
10. இந்தியா சந்தித்த மக்கள் இயக்கங்களிலேயே இது மிகப்பெரியது. ஆனால் எங்கும் எந்த வன்முறையும் நடைபெறவில்லை. 90,000க்கும் மேற்பட்டோர் கைதானர்கள்.

18) இந்தியாவின் பிரிவினைக்குப் பின்னால் இருந்த காரணங்களை விவாதிக்கவும்.

**பதில் : இந்தியாவின் பிரிவினைக்குப் பின்னால் இருந்த காரணங்கள்:**

1. இந்துமுஸ்லீம் ஒற்றுமையின் தூதராக பாராட்டப்பட்ட ஜின்னா பின்னர் தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டு முஸ்லீம்களுக்கு தனிநாடு என வலியுறுத்த ஆரம்பித்தார்.
2. மத்திய சட்டப்பேரவையில் இட ஒதுக்கீடு வழங்குவது குறித்து ஜின்னா சட்டதிருத்தத்தைக் கொண்டுவந்தார்.
3. மூன்றில் ஒரு பங்கு இடங்கள் முஸ்லிம்களுக்கு ஒதுக்கப்பட வேண்டும் என்று கோரினார். பின்னர் 14 அம்சங்கள் என்ற தீர்மானத்தை முன் மொழிந்தார் எனினும் அனைத்தும் தோல்விகண்டது.
4. முஸ்லிம்களுக்கு தனிநாடு வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தியபடி 1934ஆம் ஆண்டு முஸ்லிம் லீக்கிற்கு புத்துயிர் ஊட்டினார்.
5. அமைச்சரவைகளை கடுமையாக விமர்சித்த ஜின்னா, அமைச்சரவைகள் பதவி விலகிய நாளை "மீட்பு நாள்" என்று அறிவித்தார்.
6. சுதந்திர இந்தியாவில் தங்களது அனைத்து அரசியல் அதிகாரங்களையும் முஸ்லிம்கள் இந்துக்களிடம் இழந்துவிடுவர் என்று வாதிட்ட ஜின்னா 1940 ஆண்டு முஸ்லிம்களுக்கு தனிநாடு வேண்டும் என்று வலியுறுத்தினார்.
7. காங்கிரஸ் ஒரு இந்து அமைப்பு என்று குறைகூறிய முஸ்லிம்லீக், இந்தியாவில் முஸ்லிம்களின் ஒரேயொரு பிரதிநிதியாக தாம் மட்டுமே விளங்குவதாக அறிவித்தது.
8. இந்து மகாசபை மற்றும் ராஷ்டிரிய சுவயம் சேவக் சங் (RSS) ஆகியன முஸ்லிம்களுக்கு எதிரான நிலைப்பாட்டை எடுத்தன.
9. இந்துக்கள் மற்றும் முஸ்லிம்களின் நலன்கள் ஒன்றுக்கொன்று வேறுபட்டவை மற்றும் எதிரானவை என்று இந்து மகாசபையும், முஸ்லிம் லீக்கும் கோரின.
10. ஆங்கிலேயரின் பிரித்தாளும் கொள்கையின் சில நடவடிக்கைகளான வங்கப்பிரிவினை, தனித் தொகுதிகள் ஆகியன மத வேறுபாடுகளைத் தூண்டின.
11. 1933இல் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக மாணவரான ரஹ்மத் அலி பாகிஸ்தானை உருவாக்கும் எண்ணத்தினை வெளிப்படுத்தினார்.
12. இந்து முஸ்லிம் ஒற்றுமையை வலியுறுத்தி வந்த முகம்மது இக்பால் தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டு முஸ்லிம்களுக்கு தனிநாடு வேண்டும் என்று பிரச்சாரம் செய்ய ஆரம்பித்தார்.
13. சிம்லா மாநாட்டில் காங்கிரசும் முஸ்லிம் லீக்கும் ஓர் ஒப்பந்தத்தை எட்ட முடியவில்லை. அனைத்து முஸ்லிம் உறுப்பினர்களும் முஸ்லிம் லீக்கிலிருந்துதான் இடம்பெற வேண்டும் என்று ஜின்னா கோரினார்.
14. இடைக்கால அரசு நிறுவப்படும்போது மாகாணங்களைப் பிரிப்பது தற்காலிகமாக இருக்க வேண்டும் என்று காங்கிரசும், நிரந்தர அமைப்பாக இருக்க வேண்டும் என்று முஸ்லிம்லீக்கும் முரண்பட்டன.
15. 1946ஆம் ஆண்டு ஆகஸ்ட் 16ஆம் நாளை நேரடி நடவடிக்கை நாளாக ஜின்னா அறிவித்தார்.
16. ஆர்ப்பாட்டங்களும் கடையடைப்புப் போராட்டங்களும் நடந்தது விரைவில் அது இந்து முஸ்லிம் மோதலாக உருவெடுத்தது.
17. இது வங்காளத்தின் இதர மாவட்டங்களுக்கும் பரவியது. நவகாளி மாவட்டம் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டது.
18. மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு காந்தியடிகள் நடைபயணம் செய்து மோதல்களை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தார்.
19. ஆயினும் பிரிவினை என்பது தவிர்க்க முடியாத ஒன்றாயிற்று.
20. 1947ஆம் ஆண்டு ஜூலை 18ஆம் நாள் பிரிட்டிஷ் நாடாளுமன்றம் இந்திய விடுதலைச் சட்டத்தை இயற்றியதையடுத்து. மவுண்ட்பேட்டன் திட்டப்படி இந்தியா மற்றும் பாகிஸ்தான் என இரண்டு பகுதிகளாக இந்தியா பிரிக்கப்பட்டது.

19) காங்கிரஸ் அமைச்சரவைகளும் அவற்றின் பணியும் பற்றி விரிவாக கூறவும்.

**பதில் :** (i) 1937ஆம் ஆண்டு தேர்தல்கள் அறிவிக்கப்பட்டதுடன் 1936 ஆம் ஆண்டின் இந்திய அரசச் சட்டம் அமல்படுத்தப்பட்டது.

(ii) சட்டமறுப்பு இயக்கத்தால் காங்கிரஸ் பெரிதும் பலன் பெற்றது. சட்டப்பேரவை புறக்கணிப்பைக் கைவிட்ட காங்கிரஸ் தேர்தல்களில் போட்டியிட்டது.

(iii) பதினோரு மாகாணங்களில் காங்கிரஸ் வெற்றிபெற்றது. மதராஸ், பம்பாய், மத்திய மாகாணங்கள் ஒடிசா, பீகார், ஐக்கிய மாகாணங்கள், வடமேற்கு எல்லை மாகாணம், சார் முஹம்மது சாதுல்லா தலைமையிலான அசாம் பள்ளத்தாக்கு முஸ்லிம் கட்சியுடன் இணைந்து கூட்டணி அரசு உட்பட எட்டு மாகாணங்களில் அது ஆட்சி அமைத்தது.

(iv) காங்கிரஸ் அரசுகள் பிரபலமான அரசுகளாக செயல்பட்டன. மக்களின் தேவைகளை அவை நிறைவேற்றின. அமைச்சர்களின் ஊதியம் மாதம் ஒன்றுக்கு 2 ஆயிரம் ரூபாயிலிருந்து 500 ரூபாயாக குறைக்கப்பட்டது.

(v) தேசியவாதிகளுக்கு எதிராக எடுக்கப்பட்ட முந்தைய நடவடிக்கைகள் ரத்து செய்தனர். காவல்துறை அதிகாரங்கள் கட்டுப்படுத்தப்பட்டன.

(vi) விவசாயிகளின் கடன்கள் குறையவும் தொழிலக தொழிலாளர்களின் பணி நிலைமை மேம்படவும் சட்டபூர்வ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.